முருகப்பெருமான் துணை

**மகான் மெய்கண்டதேவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**05.06.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. தான தரும பலம் கூட்டி
   தரணியோர்க்கு வழிகாட்டிட
   ஞானம் அருளும் ஆறுமுக அரங்கனே
   ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது விடை திங்கள்
   குறைவிலா இருபானீர் திகதி கதிர்வாரம்
   (சுபகிருது வருடம் வைகாசி மாதம் 22 ம் நாள், 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை)
   தெரிவிப்பேன் அருளாசி தன்னை
   தேசிகனுக்கு மெய்கண்ட தேவர் யானும்
3. யானும் உலகோர் கடைத்தேற
   உயர்வழியென அரங்கன் வழியுரைப்பேன்
   ஞானக் குடில் அரங்கன் படைத்த
   ஞானிகள் வாழ் பிரணவக்குடில்
4. குடில்தன்னை உலக மக்கள்
   கூறிடுவேன் அனுகி வந்து
   தேடியே ஆறுமுகனார் அவதார
   தேசிகன்பால் தீட்சை பெற்று
5. பெற்றுமே மகாமந்திர உரு
   பிரம்ம வேளை நித்ய பூசையாக
   ஆற்றல்பட அனுதினமும் தொடர
   அனுதினமும் இயன்ற தருமம்
6. தருமம் எளியவரை நோக்கி
   தயவாக செயல்பாடு காண
   ஆறுமுகனார் அருளும் ஆசியும்
   அறிவிப்பேன் வரமாகக் கிட்டி
7. கிட்டியே மெய்ஞான பலமும்
   குருவருளாக அரங்கன் மூலம்
   தட்டாது கிட்டி உலகமக்கள்
   தரணியில் தேற்றம் காண்பர்
8. காண்கவே மாற்றம் தருகின்ற
   கந்த வேலன் சக்தியான நல்
   மேன்மை நிறைந்த ஞானியை
   முழுமைபட நம்பி உலகமக்கள் வர
9. வருகவே கலியுக பிரச்சினைகள்
   வதையான வட்டி வன்கொடுமை
   நெருடலான வக்கிர கொடூரங்கள்
   நிலவுலகை விட்டு ஓடநேரும்

10. நேருமை கொண்ட மக்களாய்
நேருமை நிறைந்த சமூகமாய்
நேருமையான ஆளுமையாய்
நீதி நிறைந்த அதிகாரிகளாக நிரம்பி

11. நிரம்பி நிலவுலகம் பாதுகாப்பும்
நிலைத்தன்மை தரும் ஞானஆட்சியும்
பெருமைபட கண்டு சிறக்கும்
புகன்றிய அருளாசி முற்றே

–சுபம்–